M.C.O.P.No. 114/2020

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

Date: 01.06.2026

ம.சா.1 – பாண்டியராஜ்                    த/பெ – கிருஷ்ணசாமி

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

1) விபத்து நடக்கும் போது நான் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து சென்றேன் என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக காவல்துறையில் யார் புகார் சொன்னது என்றால் என்னை காப்பாற்ற வந்தவர் தான் புகார் கொடுத்தார், நான் சுயநினைவு இல்லாமல் இருந்தேன். நான் கொடுத்த புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் நான் புகார் கொடுக்கவில்லை, இருசக்கர வாகனத்தினை ஓட்டி சென்ற பாண்டியராஜன் புகார் கொடுத்தார். மதுரை–விருதுநகர் ரோட்டில் மேற்கே இருந்து வந்து தெற்கு பக்கம் திரும்பும் போது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்ற பாண்டியராஜன் வாகனம் வருவதை கவனிக்காமல் சாலையின் குறுக்கே சென்றதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

2) மேற்படி விபத்திற்கு இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்ற பாண்டியராஜனின் கவனக்குறைவு தான் காரணம் என்றும், மேற்படி விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் காரணம் இல்லை என்றால் சரியல்ல. விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்கு சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயம் என்பதால் சிகிச்சைக்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

3) நான் பயணம் செய்த இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர் மேற்படி விபத்தினை ஏற்படுத்தியதால் 2ம் எதிர்மனுதாரர் எந்தவித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் எந்தவித காரணமும் இல்லாததால் 2ம் எதிர்மனுதாரர் வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.